## பழனி கோயில் நில முறைகேடு!

# கைதான வழக்குரைஞர் மதுரை சிறையில் மரணம்!

**மதுரை, ஆக.11-**

**பழனி கோயில் நிலத்தை முறைகேடாக பத்திரப் பதிவு செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட வழக்குரைஞர் அன்வர்தீன் மதுரை மத்திய சிறையில் திடீரென சனிக்கிழமை மரணமடைந்தார். இதையடுத்து சிறைக் காவலர்கள், உடல் கூறாய்வு செய்த மருத்துவர்களிடம் மதுரை மாவட்ட விரைவு நீதிமன்ற நீதிபதி ராஜபிரபு விசாரணை நடத்தினார்.**

திண்டுக்கல் மாவட்டம், பழனியில் தண்டாயுதபாணி சுவாமி கோயில் கட்டுப்பாட்டில் உள்ள தண்டபாணி சுவாமிகள் அறக்கட்டளைக்குச் சொந்தமான 1.40 ஏக்கர் நிலத்தை முறைகேடாக தனி நபர்களுக்கு பத்திரப் பதிவு செய்ததாகத் தொடுக்கப்பட்ட வழக்கில், சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், நிலத்தை விற்பனை செய்த த.முருகதாஸ், அந்த நிலத்தை வாங்கிய கா.வெள்ளைத்துரை, து.சேதுபதி உள்பட 11 பேர் மீது சி.பி.சி.ஐ.டி. போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

இவர்களில் விழுப்புரத்தைச் சேர்ந்த முருகதாஸ் வெள்ளைத்துரை (60), சேதுபதி (67), இவர்களுக்கு உதவிய பழனி கவுண்டன்குளம் பகுதியைச் சேர்ந்த வழக்குரைஞர் அஸ்வர்தீன் (65) ஆகிய 4 பேரையும் காவலில் எடுத்து சி.பி.சி.ஐ.டி. போலீஸார் கடந்த 3 நாள்களாக தீவிர விசாரணை மேற்கொண்டனர். இதையடுத்து. இவர்கள் மதுரை த்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், வழக்குரைஞர் அன்வர்தீனுக்கு வெள்ளிக்கிழமை இரவு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, சிறை வளாகத்தில் உள்ள மருத்துவமனையில் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. சனிக்கிழமை அதிகாலை மீண்டும் அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதால், அவசர ஊர்தி மூலம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர். இதையடுத்து, அவரது உடல் கூறாய்வுக்காக பிணவறைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதுகுறித்து விசாரணை நடத்துவதற்காக, மதுரை மாவட்ட விரைவு நீதிமன்ற நீதிபதி ராஜபிரபு சனிக்கிழமை காலை 11 மணியளவில் அரசு மருத்துவமனையின் பிணவறைக்கு வந்தார். அங்கு அன்வர்தீனின் உடலில் ஏதேனும் காயங்கள் உள்ளனவா. அவர் இறப்புக்கான காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடத்தினார். பின்னர், நீதிபதி ராஜபிரபு. மதுரை மத்திய சிறையிலும் விசாரணை நடத்தினார். அப்போது அன்வர்தீன் அடைக்கப்பட்டிருந்த அறை, அவருக்கு வழங்கப்பட்ட முதலுதவி சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார்.

இதுகுறித்து அரசு ராஜாஜி மருத்துவமனையின் உறைவிட மருத்துவ அலுவலர் சரவணன் கூறியதாவது:-

பொதுவாக விசரணையில் இருக்கும் சிறைவாசி உயிரிழந்தால் உடல் கூறாய்வு பரிசோதனைப் பணிகளை பிற மாவட்டங்களைச் சேர்ந்த அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் மேற்பார்வையில் செய்ய வேண்டும் என்ற உயர் நீதிமன்ற உத்தரவு உள்ளது.

இதன்படி, அன்வர்தீன் உடல் மதுரை, விருதுநகர், திண்டுக்கல் அரசு மருத்துவமனைகளின் சட்டம் சார்ந்த தடயவியல் மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் மேற்பார்வையில் கூறாய்வு செய்யப்பட்டது. மேலும், இந்தக் கூறாய்வு முழுவதும் வீடியோவாகப் பதிவு செய்யப்பட்டது.

முன்னதாக, அன்வர்தீன் முழு உடல் சி.டி. ஸ்கேன் பரிசோதனையும் செய்யப்பட்டது. மருத்துவமனைக்கு வரும் வழியில் அவர் இறந்ததால், உடல் உள் உறுப்புகள் ரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப் படவுள்ளன. மேலும் கூறாய்வு குறித்த ஆய்வறிக்கை வந்தவுடன் இறப்புக்கான உண்மையான காரணம் தெரியவரும். கூறாய்வுக்குப் பிறகு அன்வர்தீன் உடல் அவரது உறவினர்களிடம் சனிக்கிழமை மாலை ஒப்படைக்கப்பட்டது என்றார் அவர்.

## கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு

# ஒன்றிய அரசு செயல்படுத்திய முக்கிய திட்டங்கள் என்ன?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக.11-

கடந்த 3 ஆண்டுகளில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் வேளாண் மக்களுக்கு செயல்படுத்திய சிறப்பு திட்டங்கள் என்ன என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து இந்திய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரிடம் கேட்கப்பட்ட கேள்விகள் வருமாறு:-

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் விவசாயிகளின் நலனுக்காக ஒன்றிய அரசு செயல்படுத்தியுள்ள முக்கிய மத்திய அரசுத் திட்டங்கள் என்ன? அவற்றின் விவரங்கள் திட்டவாரியாக என்ன?

(ஆ) இத்திட்டங்களின் மூலம் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவு? இதில் வருமான மேம்பாடு, பாசனம், பயிர்க் காப்பீடு, நிறுவனக் கடன், வேளாண் இயந்திரமயமாக்கல் மற்றும் சந்தை அணுகல் ஆகியவற்றுக்கான ஆதரவு உள்ளிட்ட விவரங்கள் மாவட்ட வாரியாக என்ன?

(இ) இத்திட்டங்கள் வேளாண் உற்பத்தித்திறன், விவசாயிகளின் வருமானம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலன் ஆகியவற்றில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் மதிப்பீடு மேற்கொண்டுள்ளதா?

(ஈ) மாநிலத்தில் தகுதியுடைய விவசாயிகளிடையே இத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு, டிஜிட்டல் அணுகல், திட்டங்களின் ஒருங்கிணைப்பு (convergence) மற்றும் உரிய காலத்தில் பயன்கள் வழங்கப்படுதல் ஆகியவற்றை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

(உ) விவசாயிகளின் நலனை மேலும் வலுப்படுத்தவும், நிலையான வேளாண் வளர்ச்சியை தமிழ்நாட்டில் ஊக்குவிக்கவும் முன்மொழியப்பட்டுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு வேளாண் துறை இணை அமைச்சர் விரிவான பதில் அளித்துள்ளார்.

## நோய் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்த

# ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அதற்கான திட்ட விவரங்கள் என்ன?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 11 -

டெல்லியில் பாராளுமன்ற மாநிலங்களவை மழைக்கால கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது . கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சக சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை நோய் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்துதல் குறித்து எழுத்துப்பூர்வமாக கேள்வி எழுப்பினார்.

அதில் நோய் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? அது குறித்த விவரங்கள் மற்றும் செயல்படுத்தலின் தற்போதைய நிலை என்ன? இதற்கு சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் பதில் அளிப்பாரா? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ள சுகாதார மற்றும் நல அமைச்சகத்தின் இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத் திட்டத்தின் (IDSP) கீழ் நாட்டில் நோய் கண்காணிப்பு அமைப்புகளை வலுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் கண்காணிப்பு உள்கட்டமைப்பு, ஆய்வக வலைப்பின்னல்கள், நிகழ்வு சார்ந்த கண்காணிப்பு, நோய் பரவல் குறித்த விசாரணை மற்றும் அதற்கான எதிர்வினை வழிமுறைகள் ஆகியவற்றை வலுப்படுத்துதல், கண்காணிப்புப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல் மற்றும் நிகழ்நேரத்திற்கு மிக நெருக்கமான நோய் கண்காணிப்பிற்காக டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும். மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செயல்படுத்தலின் தற்போதைய நிலை குறித்த விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

நோய்த்தொற்று பரவல்கள் குறித்த சரியான நேரத்திலான விசாரணை, இடர் மதிப்பீடு மற்றும் பயனுள்ள கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு ஆதரவளிக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் பல்துறை சார்ந்த விரைவு எதிர்வினைக் குழுக்களும் (RRTs), தேசிய அளவில் 'தேசிய கூட்டு நோய்த்தொற்று எதிர்வினைக் குழுவும்' (NJORT) நிறுவப்பட்டுள்ளன.

நோய் கண்காணிப்பு, நோய்த்தொற்று பரவலைக் கண்டறிதல், அறிக்கை அளித்தல் மற்றும் அதற்கான எதிர்வினை நடவடிக்கைகளை வலுப்படுத்த மருத்துவ அதிகாரிகள், தொற்றுநோயியல் நிபுணர்கள், நுண்ணுயிரியலாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பணியாளர்களுக்குத் தொடர்ச்சியான பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

'தேசிய ஒன் ஹெல்த் மிஷன்' (NOHM) மூலம் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு முறையை அரசாங்கம் வலுப்படுத்தி வருகிறது. இத்திட்டம் 16 அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு இடையே ஒருங்கிணைந்த செயல்பாட்டை ஊக்குவிக்கிறது; இதில் சுகாதார ஆராய்ச்சித் துறை (DHR) அல்லது இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) ஆகியவை முதன்மைச் செயலாக்க முகமையாகச் செயல்படுகின்றன.

viii. ஒருங்கிணைந்த 'ஒன் ஹெல்த்' (OneHealth) கண்காணிப்பு குறித்த ஆலோசனை மற்றும் மறு ஆய்வுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது; சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையம் (NCDC) இதன் செயலகமாகச் செயல்படுகிறது.

பொது சுகாதார அச்சுறுத்தல்களை முன்கூட்டியே கண்டறிந்து எதிர்கொள்ளும் திறனை வலுப்படுத்தவும், ஒருங்கிணைந்த கண்காணிப்பை மேம்படுத்தவும், குறிப்பிட்ட நோய்கள், கழிவு நீர் மற்றும் மரபணு (genomic) சார்ந்த கண்காணிப்புக்கான முன்னோடித் திட்டங்களை இத்திட்டம் தொடங்கியுள்ளது என ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.

இதுவரை ரூ.6 கோடியே 53 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 53 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 10-08-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஜி. அண்ணாசாமி, மாத்தூர் மேற்கு, தஞ்சை மாவட்டம் | – 25,000/– |
| 2. | எம்.பி.மாணிக்கம், வி.புதுப்பாக்கம், வானூர், விழுப்புரம் மாவட்டம். | – 25,000/– |
| 3. | ரா.முத்துசாமி, கரியப்பா நகர், கள்ளக்குறிச்சி மாவட்டம். | – 25,000/– |
| 4. | ஜி. ராமலிங்கம், கிளைச் செயலாளர், கோதண்டவிளாகம், நங்குடி, கடலூர் | – 25,000/– |
| 5. | வி. சீதாபதி, மேல வாழக்கரை கிராமம், திருக்குவளை, நாகை மாவட்டம். | – 25,000/– |
| 6. | மு.திருசங்கு, வடக்கு தெரு, செம்பதனிருப்பு, சீர்காழி, மயிலாடுதுறை | – 25,000/– |
| 7. | என். பாலகிருஷ்ணன், காட்டுக்காரத் தெரு, திருவாரூர் – 610 001. | – 25,000/– |
| 8. | டே.லீமாரோஸ்லின், எறையூர் கிராமம், வேப்பந்தட்டை, பெரம்பலூர் மாவட்டம் | – 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

## மதுரையில் – தென்மண்டல வழக்கறிஞர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

# உள்ளாட்சித் தேர்தல் வருவதற்கு முன் சட்டமன்றத் தேர்தல் வருவதற்கும் வாய்ப்பு!

## கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ பேச்சு!



மதுரை, ஆக. 11–

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் வருவதற்கு முன்பே சட்டமன்றத் தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாக கழக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ மதுரையில் நடைபெற்ற தென் மண்டல தி.மு.க. வழக்கறிஞர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் தெரிவித்தார்.

தி.மு.க. சட்டத்துறை சார்பில் தென்மண்டல தி.மு.க. வழக்கறிஞர்கள் கலந்துரையாடல் கூட்டம் மதுரை உத்தங்குடி உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தி.மு.க. சட்டத்துறை செயலாளர் முன்னாள் எம்.பி. என்.ஆர். இளங்கோ தலைமையில் நடைபெற்றது.

விருதுநகர் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு, மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி, முன்னாள் சபாநாயகர் இரா.ஆவுடையப்பன், தேனி வடக்கு மாவட்ட செயலாளர்டி.தங்கதமிழ்செல்வன் எம்.பி., மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி, சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ். ரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், ராஜா முகம்மது, தலைமை கழக வழக்கறிஞர்கள் கலாநிதி, மனோஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கோகுல்நாத் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கூட்டத்தில் முதலில் பேசிய வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி,

### துடிப்போடு இருக்கும் வழக்கறிஞர் அணி

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகளை யாரும் எதிர்பார்க்கவில்லை, நாம் அ.தி.மு.க.வை எதிர்த்து தான் களமாடினோம், த.வெ.க. ஆட்சிக்கு வந்தது நம் கவனக்குறைவால் தான், உணர்வோடும் துடிப்போடும் இருக்கும் வழக்கறிஞர் அணி தி.மு.க.வில் தான் உள்ளது.

தி.மு.க. ஆட்சி இழந்தவுடன் தொண்டர்கள் சோர்வில் இருந்தார்கள், ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மீது இந்த அரசு பொய் வழக்கு போட்டவுடன் தி.மு.க.வில் உள்ள அனைவரும் அரை மணி நேரத்தில் நாடே திரும்பி பார்க்கும் வகையில் உணர்வுப் பூர்வமான போராட்டத்தை நடத்தினார்கள். சென்னையில் இருந்து தஞ்சாவூர் அழைத்து வரும் வரை தி.மு.க. தொண்டர்களிடையே ஒரு மிகப் பெரிய எழுச்சி ஏற்பட்டது. தி.மு.க. வழக்கறிஞர்கள் அணியில் உள்ள வழக்கறிஞர்களுக்கு சில பல குறைகள் மனதில் இருந்தாலும் மாற்றுக் கட்சியில் சிலர் எதையாவது எதிர்ப்பார்த்து போகலாம். ஆனால் எதையும் எதிர்பார்க்காமல், எதற்கும் ஆசைப்படாமல் இயக்கம் மட்டுமே முக்கியம் என்று உள்ளவர்கள் தி.மு.க. வில் தான் அதிகம் உள்ளார்கள்.எதுவுமே தெரியாமல் இந்த ஆட்சி நடந்து வருகிறது என்றார்

அதனைத் தொடர்ந்து தலைமையுரை ஆற்றிய தி.மு.க. சட்டத் துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ தமிழக வெற்றிக் கழக ஆட்சியில் யாருக்கும் சட்டமும் தெரியவில்லை, சட்டத்தை சொல்லி தர ஆளும் இல்லை.ஒருவர் மீது எதற்காக வழக்கு போடுகிறோம் என்பதை ஆய்வு செய்ய கூட தெரியவில்லை. தி.மு.க.வில் உள்ள வழக்கறிஞர்கள் எங்கேயாவது பிரச்சினை என்றால் நாம் முதல் ஆளாக சென்று நிற்க வேண்டும். முன்னாள் அமைச்சராக இருந்தாலும், தொண்டராக இருந்தாலும் எல்லோருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

கைது செய்யப்படுவதற்கு முன்பாக தகவல் தெரிந்தால் உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். தி.மு.க.வில் உள்ள வழக்கறிஞர்களுக்கு அரசியல் உணர்வு இருந்தால் மட்டும் போதாது, சட்டத்தையும் நன்றாக படிக்க வேண்டும்,

இந்த சர்வாதிகார ஆட்சியில் தி.மு.க.வில் உள்ளவர்கள் எதற்காகவும், எப்போதும் கைது செய்யப்படலாம், ஆனால் சட்டத்திற்கு புறம்பாக செய்யும் எந்த ஒரு கைதையும் தி.மு.க. அனுமதிக்காது, அதை எதிர்த்து போராடும், தி.மு.க. வழக்கறிஞர்கள் அணி மாநாடு சென்னையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மிக விரைவில் தேர்தல் வரும். உள்ளாட்சி தேர்தல் வருவதற்கு முன் சட்டமன்ற தேர்தல் வருவதற்கும் வாய்ப்பு உள்ளது, அதற்கும் தி.மு.க. வழக்கறிஞர் அணியினர் தயாராக இருக்க வேண்டும் என்றார்.

மேலும் இக்கூட்டத்தில் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட செயலாளர் கிரகாம்பெல், தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன், முன்னாள் உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் வீர கதிரவன் உள்ளிட்ட தென் மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கழக சட்டத்துறை வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

முடிவில் மதுரை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தேவசேனன், மதுரை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சிவனேசன் உள்ளிட்டோர் நன்றி கூறினர்.